**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**திருப்பூர்.**
**முன்னிலை : திரு.K.R.கண்ணன்,பி.ஏ.,பி.எல்.,**
**(J.O.CODE : TN01220)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**
**2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், பங்குனித் திங்கள் 08 ம் நாள்**

**E.P.No.19/2018**

**CNR No.TNT107000130/2018**

1. செல்வாம்பாள் (இறப்பு).
2. பத்மாவதி (இறப்பு).
3. அமுதா.
4. மைனர் மஞ்சு (இறப்பு).
5. சுப்ரமணியம் (இறப்பு). .... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சென்னியப்பன் (இறப்பு).
2. சண்முகம் (இறப்பு).
3. கிருஷ்ணமூர்த்தி (இறப்பு).
4. உதவி ஆணையர்,
   விற்பனை வரி அலுவலகம்,
   பொள்ளாச்சி.
5. சி.ஜெயபால்.
6. இந்திராணி.
7. கமலா.
8. கவிதா.

**( இடைக்கால மனு எண்.79/2023 நாள் 21.07.2023 ம் தேதி ஏற்பட்ட உத்தரவின்படி திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது)**

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

நிறைவேற்றுமனு என் முன்பாக 06.03.2024ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.M.அருணாசலம், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், 8ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மணிகண்டன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு பரிசீலித்தும் இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து வந்த இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

## உத்தரவு

நிறைவேற்று மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கு எண்.383/2004ல் ஏற்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையின்படி மனு சொத்து விவரத்தில் 5ம் வாதிக்கு பிரித்து கொடுக்கப்பட்ட சொத்தை எதிர்மனுதாரர்கள் சுவாதீனம் கொடுக்க உத்தரவிடக்கோரியும், இதர பரிகாரங்கள் கேட்டு நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளார்.

1) **திருத்தப்பட்ட மனுவின் சுருக்கம்**:–

i) இம்மனுவில் 3ம் மனுதாரரை தவிர மற்ற மனுதாரர்கள் இறந்து போய் உள்ளார்கள். அசல் வழக்கு எண்.383/2004ல் இறுதிநிலை தீர்ப்பாணையின்படி நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை வரைபடத்தில் புளூ வர்ணமிட்ட 'பி' பாக சொத்து 5ம் வாதிக்கும், பச்சை வர்ணமிட்ட 'சி' பாக சொத்து 5, 6 எதிர்மனுதாரர்கள்/2ம் வாதியின் வாரிசுகளுக்கு பிரித்து

கொடுக்கப்பட்டுள்ளதால், 5ம் மனுதாரருக்கு இறுதிநிலை தீர்ப்பாணையின்படி ஒதுக்கப்பட்ட சொத்தை எதிர்மனுதாரர்கள் சுவாதீனம் வழங்க வேண்டும் என்று நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii) நிறைவேற்று மனு தாக்கல் செய்தபோது 1ம் எதிர்மனுதாரர் சென்னியப்பன், 3ம் எர்மனுதாரர் கிருஷ்ணமூர்த்தி இறந்துபோய் உள்ளார்கள். நிறைவேற்று மனு நிலுவையில் இருக்கும்போது 2ம் எதிர்மனுதாரர் இறந்துபோனதால் இடைக்கால மனு எண்.79/2023 ஏற்பட்ட உத்தரவின் அடிப்படையில் 7, 8 எதிர்மனுதாரர்கள் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 08.10.2018ம் தேதி 4ம் எதிர்மனுதாரரை பொருத்து நிறைவேற்று மனுவிலிருந்து விடுவிக்கபட்டதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, 4ம் எதிர்மனுதாரர் நிறைவேற்று மனுவிலிருந்து விளக்கி கொள்ளப்பட்டுள்ளார். 6ம் எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்.

2) <u>2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:–</u>

i) மனுதாரர்களின் மனு சட்டப்படியும், சங்கதிகள் படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ள சங்கதிகள் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்கள் ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்ய வேண்டும்.

ii) மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மனுதாரர் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டும். மனுவில் சொல்லப்பட்டுள்ளவாறு மனு சொத்தில் மனுதாரருக்கு உரிமையோ, பாத்தியமோ இல்லை. 2ம் எதிர்மனுதாரர் இறுதிநிலை தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீட்டு வழக்கு எண்.32/2017 தாக்கல் செய்து கூடுதல் சார்பு நீதிமன்றம் திருப்பூரில் நிலுவையில் இருந்து வருகிறது.

iii) இந்த எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களை பொருத்து விளம்புகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி 3ம் மனுதாரருக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.340/2006 தாக்கல் செய்து 14.09.2018ம் தேதி விசாரணைக்கு வர வேண்டியுள்ளது. ஆகையால், நிறைவேற்று மனுவை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

3) **8ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த கூடுதல் எதிருரையின் சுருக்கம்:–**

i) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது பொய், மோசடி, சட்டப்படி செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர் உண்மை என்று ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு சில சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே தக்க ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும்.

ii) மனுதாரர் பிரமாணப்பத்திரிக்கையில் பத்தி 2ல் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யான சங்கதிகளாகும். உண்மையில் எதிர்மனுதாரர் பெயரில் எந்தவித நீதிமன்ற உத்திரவும் பெறப்படவில்லை.

iii) மனுதாரர் பிரமாணப்பத்திரிக்கையில் பத்தி 3ல் சொல்லியுள்ளதுபோல் 2ம் எதிர்மனுதாரர் சண்முகம் 25.07.2022ம் தேதியில் இறந்துவிட்டார் என்பது உண்மை. அதன் பிறகு சொல்லப்பட்ட சங்கதிகள் அனைத்தும் பொய் என்று இந்த எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

iv) மனுதாரர் மனுவில் எந்த காரணத்திற்காக இந்த எதிர்மனுதாரரை கட்சிக்காரராக சேர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

v) மனுச் சொத்தானது ஆதியில் இந்த எதிர்மனுதாரரின் பாட்டியான சாமாத்தாள் என்பவர் பத்திர எண்.1113/1957 படி 13.07.1957ம் தேதியில் கிரயம் பெற்ற சொத்தாகும். அதன் பிறகு மேற்படி சாமாத்தாள் அவரது சுய அனுபவத்தில் வைத்து அனுபவித்து வந்து அதன் பிறகு மேற்படி சொத்து குறித்து கணவர் சென்னியப்பகவுண்டர் பெயருக்கு 05.07.1966ம் தேதியில் ஒரு உயில் சாசனம் எழுதி வைத்துவிட்டு 26.12.1969ம் தேதியில் மேற்படி சாமாத்தாள் இறந்து விட்டார். அதன் பிறகு சென்னியப்ப கவுண்டர் மேற்படி சொத்தினை அவரது சொந்த அனுபவத்தில் வைத்து அனுபவித்து வந்து 09.11.1999ம் தேதியன்று அவரது மகனான சண்முகம் பெயருக்கு ஒரு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார். மேற்படி சென்னியப்பகவுண்டர் 04.01.2000ம் தேதியில்

இறந்துவிட்டார். மேற்படி சொத்தினை இந்த எதிர்மனுதாரரின் தந்தை சண்முகம் அனுபவித்து வந்து அவர் 01.08.2008ம் தேதியன்று சொத்து குறித்து எதிர்மனுதாரர் பெயருக்கு ஒரு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். அது முதல் இந்த எதிர்மனுதாரர் மேற்படி சொத்தினை அவரது அனுபவத்தில் வைத்து அவர் மட்டுமே அனுபவித்து வருகிறார். மனுதாரருக்கும், சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஆகவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4**) மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 8ம் எதிர்மனுதாரர் கவிதா எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டும் ஒரு மாணிக்கவாசகம் எ.ம.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.11 மற்றும் சாட்சி சான்றாவணம் Ex.y1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5)** கற்றறிந்த மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் 1, 2 மனுதாரர்கள் 1 முதல் 4 எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கு எண்.201/1985 பாகபிரிவினை கோரி திருப்பூர், சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, முதல்நிலை தீர்ப்பாணை ஏற்பட்டு, அதன் அடிப்படையில் இடைக்கால மனு எண்.105/2007 ன்படி 2017 வருடம் இறுதிநிலை தீர்ப்பாணை ஏற்பட்டதாக வாதுரைத்தார். இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் 5ம் வாதிக்கு, பிரித்து கொடுக்கப்பட்ட சொத்தை

சுவாதீனம் பெற வேண்டி நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதுரைத்தார். முதல் நிலை தீர்ப்பாணைக்கு பிறகு, இறுதிநிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருக்கும்போது 2ம் எதிர்மனுதாரர் அவருடைய மகளான 8ம் எதிர்மனுதாரரின் மீது உரிமையே இல்லாமல் ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளது செல்லாது என்று வாதுரைத்தார். பாகபிரிவினை வழக்கு இறுதிநிலை தீர்ப்பாணையின்படி 5ம் வாதிக்கு பிரித்து கொடுக்கப்பட்ட சொத்தை பொருத்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து, மேல்முறையீடு நீதிமன்றத்தில் 2ம் எதிர்மனுதாரர் இறந்த பிறகு Steps எடுக்கவில்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது தற்சமயம் மேல் முறையீடு எதுவும் நிலுவையில் இல்லை, தடை உத்தரவு எதுவும் இல்லை என்பதால் மனு அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**6)** i) கற்றறிந்த 8ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் எழுத்துப்பூர்வமான வாதுரையை தாக்கல் செய்துள்ளார். முதல் நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையில் 8ம் எதிர்மனுதாரர் தரப்பினராக இல்லை. 2ம் எதிர்மனுதாரர் சண்முகம் இறந்த பின்னர் 7, 8 எதிர்மனுதாரர்கள் தரப்பினர்களாக 3ம் மனுதாரர் சேர்த்துள்ளார் என்று வாதுரைத்தார். 2ம் எதிர்மனுதாரர் இறந்த பிறகு, அவருடைய வாரிசுதாரர்களை இறுதிநிலை தீர்ப்பாணையில் தரப்பினராக சேர்க்க மனுதாரர் தவறியுள்ளதால் மனு தள்ளுபடி

செய்யுமாறு வாதுரைத்தார். இந்த மனுவில் அறிவிப்பு வந்த பிறகுதான் 8ம் எதிர்மனுதாரருக்கு வழக்கு பற்றி விவரங்கள் தெரிய வந்தது என்று வாதுரைத்தார். 2008 வருடம் 8ம் எதிர்மனுதாரர் பெயரில் மனு சொத்தை பொருத்து அவருடைய தகப்பனார் தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்ததாகவும், மனு சொத்தில் 2008ல் இருந்து 8ம் எதிர்மனுதாரர் உரிமையாளர் என்ற அடிப்படையில் சுவாதீனத்தில் இருந்து அனுபவம் செய்து வருகிறார் என்று வாதுரைத்தார்.

ii) கற்றறிந்த 8ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், 8ம் எதிர்மனுதாரர் பெயரில் மனு சொத்தை பொருத்து தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்பட்டு, 9 ஆண்டுகளுக்கு பிறகு தாக்கல் செய்யப்பட்ட இம்மனு 8ம் மனுதாரரை கட்டுபடுத்தாது என்று வாதுரைத்தார். மனு சொத்து 8ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டால் அவர் தனியார் நிதி நிறுவனத்தில் மனு சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்றிருப்பதாகவும், இதே நீதிமன்றத்தில் மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு 8ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கு எண்.07/2024 தாக்கல் செய்திருப்பதாகவும், திருப்பூர், முதன்மை சார்பு நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு எண்.02/2019 சண்முகம் இறந்த பிறகு அவருடைய வாரிசுதாரர்களை சேர்க்காத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதை மீண்டும் கோப்புக்கு எடுக்க மனு தாக்கல் செய்துள்ளதாக வாதுரைத்தார்.

iii) 2ம் எதிர்மனுதாரர் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திரன்படி மனு சொத்து 8ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதால் அசல் வழக்கு எண்.383/2004 ஏற்பட்ட முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை 8ம் எதிர்மனுதாரரை கட்டுப்படுத்தாது என்று வாதுரைத்து நிறைவேற்று மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

7) **<u>தீர்வு</u> :-**

i) மனுதாரர் மற்றும் 8ம் எதிர்மனுதாரரின் தரப்பு வழக்கறிஞர்களின் வாதங்கள் மனு கோப்பு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

ii) 1, 2 மனுதாரர்கள், 1 முதல் 3 எர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கு எண்.201/1985 தாக்கல் செய்து, மனு சொத்து 1, 2 வாதிகளின் தாயாருக்கு பாத்தியப்பட்டது என்றும், வாதிகளின் தாயார் தாவா தாக்கல் செய்வதற்கு 12 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டதால், மனு சொத்தில் 1, 2 மனுதாரருக்கு உரிய பாகத்தை பிரித்து கொடுக்கும்படி அசல் வழக்கு எண்.201/1985 திருப்பூர், சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

iii) திருப்பூர், சார்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு பிறகு, 27.02.1987ம் தேதி அசல் வழக்கு எண்.201/1985ல் 1, 2 மனுதாரர்களுக்கு 2/5 பாகம் உள்ளது என்று முடிவு செய்து, முதல் நிலை தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது. அதன் பிறகு, இறுதிநிலை தீர்ப்பாணை மனு அதிகார வரம்புபடி

இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இடைக்கால மனு எண்.105/2007 அசல் வழக்கு எண்.383/2004 என்று கோப்புக்கு எடுக்கப்பட்டு முழு விசாரணைக்கு பிறகு, முதல்நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை, வரைபடத்தை நீள வர்ணமிட்ட 'பி' பகுதி சொத்து, 5ம் மனுதாரர்/5ம் வாதிக்கு ஒதுக்கப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணை எற்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 5ம் மனுதாரர் மனு சொத்தை சுவாதீனம் கோரி நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளார்.

iv) மனு நிலுவையில் இருக்கும்போது 2ம் எதிர்மனுதாரர் சண்முகம் இறந்துபோனதால் இடைக்கால மனு எண்.79/2023ல் ஏற்பட்ட உத்தரவின்படி 2ம் எதிர்மனுதாரரின் மனைவி கமலா மற்றும் மகள் கவிதா 7, 8 எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 8ம் எதிர்மனுதாரர் கவிதா மனு சொத்து 2ம் எதிர்மனுதாரர் சண்முகம் செட்டில்மெண்ட் பத்திர ஆவணத்தின்படி பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளதால் மனு சொத்து 8ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்று எதிர்வாதம் செய்து, நிறைவேற்று மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரியுள்ளார்.

v) 8ம் எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் குறுக்கு விசாரணையில் இந்த மனுவின் அறிவிப்பு வந்த பிறகு, வழக்கு விவரங்களை தெரிந்து கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மனுவின் 1, 2 மனுதாரர்கள் அவருக்கு அத்தை முறை வேண்டும் என்றும், சார்பு நீதிமன்ற

அசல் வழக்கு எண்.201/1985 அவருடைய அத்தை தாக்கல் செய்த விவரங்கள் தெரியாது. முதல் தீர்ப்பாணையின்படி 2 பாகங்கள் 1, 2 மனுதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டது தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். 01.08.2008 ம் தேதி 2 ம் எதிர்மனுதாரர் சண்முகம், 8 ம் எதிர்மனுதாரருக்கு மனு சொத்தை பொருத்து தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தார் என்று சாட்சியம் அளித்து தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளார்.

vi) 1, 2 மனுதாரர்கள் பாகம் கோரி முதல் நிலை தீர்ப்பாணை, இறுதிநிலை தீரப்பாணை பெற்றதை தற்போது தெரிந்துகொண்டதாகவும், 2 ம் எதிர்மனுதாரர் இதே நீதிமன்றத்தில் மனு சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என்று தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.340/2006 தள்ளுபடியான விவரம் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். விவரங்கள் தெரிந்து கொண்டு மேல்முறையீடு செய்ய நடவடிக்கை எடுக்க வழக்கறிஞர்களிடம் சொல்லியுள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். 10 மாதமாக மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்பதை பொருத்து வழக்கறிஞர்களுக்குதான் தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

vii) மனு சொத்து அவருடைய பாட்டிக்கு பாத்தியப்பட்டது என்பதை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று ஒப்புக்கொண்டுள்ளார். மனு சொத்தை பொருத்து அவருடைய பாட்டி 05.07.1966 ம் தேதி அவருடைய

தகப்பனரான சண்முகம் பெயரில் உயில் ஏற்பட்ட பிறகு, அந்த உயிலை 2ம் எதிர்மனுதாரர் வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா? என்றால் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். அசல் தானசெட்டிமெண்ட் பத்திரம் கடன் பெற்ற நிதி நிறுவனத்தில் அடமானத்திற்கு இருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார். 1991ம் வருடம் திருமணம் ஆன பிறகு 6 மாதங்களில் அப்பா வீட்டிற்கு வந்ததாகவும், அப்பாவுடன் வசித்து வந்தபோது நீதிமன்றத்திலிருந்து வந்த சம்மன் விவரங்கள் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

viii) எ.ம.சா.1 சாட்சியத்தை அனுசரித்து மனு சொத்தில் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் 8ம் எதிர்மனுதாரர் சுவாதீனத்தில் இருப்பதாக எ.ம.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். சண்முகம் சொல்லி மனு சொத்து உயில்படி சண்முகத்திற்கு பாத்தியப்பட்டதாக தெரிந்து கொண்டதாகவும், மனு சொத்தின் கதவு எண் தெரியாது, மனு சொத்தை 8ம் எதிர்மனுதாரருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

ix) 8ம் எதிர்மனுதாரரின் சாட்சியம், 8ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. முதல் நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இல்லை. மேல்முறையீடு நீதிமன்றத்தில் தடை உத்தரவுகள் எதுவும் பெற்று மனு நிலுவையில் இருக்கும்போது

2ம் எதிர்மனுதாரரோ, தற்சமயம் 8ம் எதிர்மனுதாரரோ நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தவில்லை. இந்த நீதிமன்றம் நிறைவேற்று நீதிமன்றம். இறுதிநிலை தீர்ப்பாணையின்படி தீர்ப்பாணையை நிறைவேற்ற வேண்டிய பணி இந்த நீதிமன்றத்திற்கு உள்ளது.

" It is settled law it is the duty of the executing court to execute the decree and can not go beyond the decree ".

x) 1, 2 மனுதாரர்கள் பாகபிரிவினை கோரி 1985ம் வருடம் வழக்கு தாக்கல் செய்து 27.02.1984 முதல் நிலை தீர்ப்பாணை ஏற்பட்டு அதன் அடிப்படையில் 21.06.2017ம் தேதி மனு சொத்து 5ம் மனுதாரருக்கு ஒதுக்கப்பட்டு, இறுதிநிலை தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது. முதல் தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையில் 8ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் 2ம் எதிர்மனுதாரரின் தரப்பினராக உள்ளார். 8ம் எதிர்மனுதாரர் பெயரில் 2ம் எதிர்மனுதாரர் தாவா கிராமம், டிஎஸ்.எண். 325, பிளாக் நெ.7, வார்டு 1, க.எண்.36, 34/61 – 63 1700 சதுரடி கொண்ட தார்சு கட்டிடம், 200 சதுரடி அளவிலான சிமெண்ட் கட்டிடம் ஆகியவை சேர்த்து தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின்படி 8ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார். 8ம் எதிர்மனுதாரர் இறுதிநிலை தீர்ப்பாணை ஏற்பட்ட பிறகு, 2ம் எதிர்மனுதாரர் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை 8ம் எதிர்மனுதாரர் பெயரில் ஏற்படுத்தி கொடுத்துள்ளார். ஆகையால், இறுதிநிலை தீர்ப்பாணையின்படி 5ம் வாதிக்கு

தாவா கிராமம், டி.எஸ்.நெ.98, பிளாக் 20, புளூ வர்ணமிட்ட 'பி' பகுதி சொத்து, மற்றும் பச்சை வர்ணமிட்ட 'சி' பகுதி சொத்தை பொருத்து 2ம் எதிர்மனுதாரர், 8ம் எதிர்மனுதாரர் பெயரில் ஏற்படுத்திய தானசெட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லக்கூடியதா என்பதை இந்த மனுவின் மூலம் இந்த நீதிமன்றம் தீர்மானம் செய்ய முடியாது. ஆனால், நிறைவேற்று மனுவில் சுவாதீனம் கோரி தாக்கல் செய்பட்ட சொத்தை பொருத்து இறுதிநிலை தீர்ப்பாணை ஏற்பட்ட பிறகு, 2ம் எதிர்மனுதார் ஏற்படுத்திய தானசெட்டில்மெண்ட் பத்திரம் நிகழ் வழக்கு (Lispendens) என்ற கோட்பாடால் பாதிப்படைகிறது.

xi) இறுதிநிலை தீர்ப்பாணை 'B' மற்றும் 'C' பகுதி சொத்துக்கள் பொருத்து தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்த 2ம் எதிர்மனுதாரருக்கு சட்டப்படி உரிமையில்லை. ஆகையால், இறுதிநிலை தீர்ப்பாணையின்படி மனு சொத்தை சுவாதீனம் பெற மனுதாரருக்கு உரிமை உள்ளது என்று முடிவு செய்து, மனு சொத்தை எதிர்மனுதாரர்கள் 5ம் எதிர்மனுதாரர்/5ம் வாதிக்கு சுவாதீனம் வழங்க வேண்டும் என்று, மேலே விவாதித்ததின் அடிப்படையில் உத்தரவிட்டு, மனு அனுமதிக்கப்படுகிறது. பத்தா 3 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். அழைக்க 19.04.20204.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 21 ம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2024.03.21 18:48:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்** :–

| | |
|---|---|
| எ.ம.சா.1 | திருமதி.கவிதா, க/பெ.கல்யாண சுந்தரம். |
| எ.ம.சா.2 | திரு.மாணிக்க வாசகம், த/பெ.பழனிச்சாமி. |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** :–

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 13.07.1957 | சாமாத்தாள் பெயரிலுள்ள கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் (அசல் ஆவணம் வங்கியில் கடனுக்காக அடமானம் வைக்கப்பட்டுள்ளது). |
| எ.ம.சா.ஆ.2 | 01.08.2008 | சரிதா பெயரிலுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் (அசல் ஆவணம் வங்கியில் கடனுக்காக அடமானம் வைக்கப்பட்டுள்ளது). |
| எ.ம.சா.ஆ.3 | 08.08.2022 | சண்முகம் இறப்புச் சான்றிதழ் கணினி நகல். |
| எ.ம.சா.ஆ.4 | 06.09.2022 | சண்முகம் வாரிசு சான்றிதழ் கணினி நகல். |
| எ.ம.சா.ஆ.5 | 11.02.2023 | 2021 முதல் 2023 வரையிலான வீட்டு வரி ரசீது அசல். |
| எ.ம.சா.ஆ.6 | 20.12.2022 | 2022 – 2023 வருடத்திற்கான தண்ணீர் வரி ரசீது அசல். |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.7 | – | மின் கட்டண ரசீது எண்ணிக்கை 1 அசல். |
| எ.ம.சா.ஆ.8 | 31.10.2017 | தாவா சொத்தை எல்.என்.டி ஹவுசிங் பைனான்சில் அடமானம் வைத்ததற்கான அடமான சான்றிட்ட நகல். |
| எ.ம.சா.ஆ.9 | 07.03.2022 | திருப்பூர் வடக்கு பிளாக் 109 சர்வே எண் 2க்குரிய ரயத்துவாரி மனைப் பட்டா கணினி நகல். |
| எ.ம.சா.ஆ.10 | 16.11.2023 | சாமாத்தாள் இறப்புச் சான்றிதழ் உண்மை நகல். |
| எ.ம.சா.ஆ.11 | 20.11.2023 | சென்னியப்ப கவுண்டர் இறப்புச் சான்றிதழ் உண்மை நகல். |

**<u>சாட்சி சான்றாவணம் :</u>–**

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1 | – | எ.ம.சா.2 (மாணிக்க வாசகம்)த்தின் ஆதார் அட்டை நகல் (நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது). |

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.03.21 18:48:46 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.